# **Revised**

**செ.வெ. எண்: 348** **நாள்: 19-06-2012**

<u>செய்தி வெளியீடு</u>

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் இன்று (19.6.2012) தலைமைச் செயலகத்தில், சென்னை மாநகராட்சியின் சார்பில் 59 கோடியே 14 லட்சத்து 39 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்டுள்ள சிறு பாலங்கள், கூடுதல் பள்ளிக்கட்டடங்கள், மகப்பேறு மருத்துவமனைகள், மருந்தகங்கள், மண்டல அலுவலகங்கள், வார்டு அலுவலகங்கள், வணிக வளாகங்கள் மற்றும் சமூகநலக்கூடங்கள் ஆகியவற்றையும் நகராட்சி நிர்வாகம் சார்பில் 3 கோடியே 7 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்டுள்ள கட்டடங்களையும் காணொலிக் காட்சி (Video Conferencing) மூலமாக திறந்து வைத்தார்கள்.

சர்வதேச அளவுகோலுடன் கூடிய உட்கட்டமைப்பு வசதிகளைக் கொண்ட உலகத்தரம் வாய்ந்த மாநகரமாக சென்னை மாநகரை உருவாக்க வேண்டும் என்பது மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் தொலை நோக்கு திட்டமாகும். பொதுமக்களின் நலன் கருதி தமிழகத்திலுள்ள மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்காக பல சிறப்பான திட்டங்களை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் அறிவித்து செயல்படுத்தி வருகிறார்கள்.

சென்னை மாநகராட்சியின் சார்பில் வில்லிவாக்கம் இரயில்வே சந்திக்கடவு-2ல் தமிழக அரசின் சார்பில் 13 கோடியே 39 லட்சம் ரூபாய், இரயில்வே துறையின் சார்பில் 20 கோடியே 76 லட்சம் ரூபாய், என மொத்தம் 34 கோடியே 15 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் வாகனச் சுரங்கப்பாதை; செனாய்நகர் புல்லா நிழற்சாலையில் 6 கோடியே 55 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மத்திய மண்டல அலுவலகம்; புளியந்தோப்பில் 4 கோடியே 10 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மகப்பேறு மருத்துவமனை; கூவம் ஆற்றின் குறுக்கே 3 கோடியே 37 லட்சத்து 61 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் மேத்தாநகர் ஆபிசர் காலனி மற்றும் வெங்கடாஜலபதி சாலையை இணைக்கும் பாலம்; பக்கிங்காம் கால்வாயின் குறுக்கே 3 கோடியே 12 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் இந்திராநகர் 2வது நிழற்சாலை மற்றும் ராஜிவ்காந்தி சாலையை இணைக்கும் பாலம்; விருகம்பாக்கம் கால்வாயின் குறுக்கே பாரி தெருவில் 1 கோடியே 43 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் வாகனப்பாலம்; வடபழனி மகப்பேறு மருத்துவமனையில் 1 கோடியே 50 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கூடுதல் கட்டடம்; ஆழ்வார்ப்பேட்டை சி.பி.ராமசாமி சாலையில் 1 கோடியே 21 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் பல்நோக்கு மருத்துவமனை; வியாசர்பாடி சத்தியமூர்த்தி நகரில் 62 லட்சத்து 50 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் சமூகநலக்கூடம்; டி.பி.சத்திரம் கஜபதி சாலையில் 50 லட்சத்து 75 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் மருந்தகம்; திரு.வி.க.நகர் பல்லவன் சாலையில் 49 லட்சத்து 50 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் மருந்தகம்;

ஆழ்வார்ப்பேட்டை சென்னை மேல்நிலைப் பள்ளியில் 45 லட்சத்து 32 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கூடுதல் கட்டடம்; பள்ளிக்கரணை துலுக்கானத்தம்மன் கோவில் சாலையில் 33 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் வார்டு அலுவலகம்; எம்.ஜி.ஆர். நகரில் உள்ள சென்னை மேல்நிலைப்பள்ளியில் 27 லட்சத்து 99 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கூடுதல் கட்டடம்; இரட்டைமலை சீனிவாசன் சாலையில் 23 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் வணிக வளாகம்; திருவீதி அம்மன் சாலையில் 20 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் சமூக நலக்கூடம்; பெருமாள் கோயில் தோட்ட சாலையில் 20 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் சமூக நலக்கூடம்; பெருங்குடி அண்ணா நெடும்பாதையில் 20 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் வணிக வளாகம்; ஜல்லடம்பேட்டையில் 10 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் சமூக நலக்கூடம்; அயன்புரத்தில் 8 லட்சத்து 72 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் வார்டு அலுவலகம்; என மொத்தம் 59 கோடியே 14 லட்சத்து 39 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டிலான புதிய கட்டடங்களை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் இன்று காணொலிக் காட்சி மூலமாக திறந்து வைத்தார்கள்.

மேலும், நகராட்சி நிர்வாகம் சார்பில் **திருப்பூரில் 1 கோடியே 50 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்ட நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அலுவலகக்கட்டடம்; மதுரையில் 82 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்ட நகராட்சி** நிர்வாக மண்டல இயக்குநர் அலுவலகக்கட்டடம்; திருச்சிராப்பள்ளி மாவட்டம் மணப்பாறை நகராட்சியில் 75 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்ட அலுவலகக் கட்டடம்; என மொத்தம் 3 கோடியே 7 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள புதிய கட்டடங்களை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் திறந்து வைத்தார்கள்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் இன்று, சென்னை மாநகராட்சியில் பணியில் இருக்கும் போது காலமான 100 பணியாளர்களின் வாரிசுதாரர்களுக்கு கருணை அடிப்படையில் பணி நியமன ஆணைகளை வழங்கினார்கள். மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களிடமிருந்து பணி நியமன ஆணைகளைப் பெற்றுக் கொண்ட வாரிசுதாரர்கள் தங்களது நெஞ்சார்ந்த நன்றியினை தெரிவித்துக் கொண்டார்கள்.

இந்நிகழ்ச்சியில், மாண்புமிகு நகராட்சி நிர்வாகம் மற்றும் ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் அவர்கள், சென்னை மாநகராட்சி மேயர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்துறை கூடுதல் தலைமைச் செயலாளர், நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை மாநகராட்சி ஆணையர் மற்றும் உயர் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

******

வெளியீடு: இயக்குநர், செய்தி–மக்கள் தொடர்புத் துறை, தலைமைச் செயலகம், சென்னை.
நாள்: 19.6.2012